# கப்பலோட்டிய தமிழன்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

PRESENTED BY:
KASIVI[illegible] CHETTIAR

**தமிழ்ப் பண்ணை**
தியாகராய நகர் — சென்னை.

முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1948.

விலை அணா 12

Printed at The Great Dravidian Press, 52, Armenian St., Madras - 1.

# போட்டிப் பந்தயம்

கல்கி

3302

★

நாற்பது வருஷத்துக்கு முன்னால் நமது செந்தமிழ் நாட்டில் ஒரு போட்டிப் பந்தயம் நடந்தது.

பந்தாட்டப் போட்டி யல்ல, வேறு விளையாட்டுப் போட்டிகளும் அல்ல.

கடலிலே கப்பல் விடும் போட்டி! வெகு வெகு அபாயகரமான போட்டி!

ஒரு சின்னஞ் சிறு பிள்ளைக்கும் ஒரு பெரிய பிரம்மாண்டமான ராட்சதனுக்கும் நடந்த போட்டி!

அந்தப் பிரம்மாண்ட ராட்சதன் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிதான்!

ராட்சதனுடன் போட்டியிட்ட சின்னஞ் சிறு பிள்ளை தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள். கோடானு கோடி மூலதனத்தையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சர்வ அதிகார பக்கபலத்தையும் கொண்ட பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியுடன் போட்டி போட்டு ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் விடுவதற்குப் பிரயத்தனம் செய்தார்.

மேற்படி கப்பல் போட்டி சிறிது காலம்தான் நடந்தது. நடந்த வரையில் வேடிக்கை பார்த்தவர்களுக் கெல்லாம் மிக்க உற்சாகத்தையும் பரபரப்பையும் அளித்தது.

போட்டியின் முடிவு என்ன என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் கப்பல் கம்பெனி கவிழ்ந்தே போயிற்று!

கப்பல் கவிழ்ந்தது போதாது என்று ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்கு இரண்டு ஜன்ம தண்டனையும் கிடைத்தது!

* * *

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை நடத்திய கப்பல் போட்டி வெறும் விளையாட்டு அல்ல.

அவர் ஓட்டிய கப்பல், இந்தியா தேசத்தின் சுதந்திரக் கப்பல்!

இங்கிலீஷ்காரர்களை இந்தியாவிலிருந்து ஏற்றி அவர்களுடைய ஊருக்கு அனுப்புவதற்காக ஏற்பட்ட கப்பல்!

உண்மையில், 'குவிட் இந்தியா' இயக்கத்தின் மூல காரணகர்த்தா ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளைதான் என்று சொல்லவேண்டும்.

# என் அரசியல் குரு

பொ. திருகூடசுந்தரம்

★

என்னுடைய மனத்தில் சிறு வயதிலேயே சுதந்திர விதையைத் தூவினவர் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்த என்னுடைய தந்தையாரே.

"வந்தே மாதரம்" என்னும் தெய்விக மழையைப் பொழிந்து அந்த விதையை நனைத்து முளைக்கச் செய்த பெரியார், நம்முடைய பாரத நாடு ஆங்கிலேயர்க்கு அடிமையாக இருந்து சகல கலைகளையும் இழந்துவிட்ட இந்த நாளில், முதல் முதலாகக் கப்பல் ஓட்டிய சுதந்திர மாலுமியாகிய திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

அவர்கள் 1907-ம் வருஷத்தில், நான் பதினறு வயது மாணுக்கனுக இருந்த சமயம் திருநெல்வேலி தாமிர வருணி நதி மணலில் நிகழ்த்திய சொற்பொழிவு இன்னும் என்னுடைய இதயத்தில் கணீர் கணீர் என்று ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் அன்று ஏற்றிய சுதந்திர விளக்கு என்றும் வாடா விளக்காக ஆயிரக்கணக்கான மக்களுடைய மனத்தில் ஜகஜ்ஜோதியாக எரிந்துகொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் எங்கு சென்

ருலும் அரசாங்கம் கண் காணிக்கும் பாக்கியம் திருநெல் வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர் களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்தவர் அவரே. ஆம், பிள்ளை அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவைச் சுதந்திர பூமியாக ஆக்கிவிட்டார்கள். உலக சரித் திரத்தில் இடம் பெறுமாறு செய்து விட்டார்கள். நம் முடைய கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதியாருடைய தேசீய கீதங்கள் பலவற்றிற்கு இலக்கியமாக அமைந்திருந் தார்.

அவர் பாரததேவியின் விடு தலைக்காக அனுபவித்த எண் ணிலா இயம்பொணு இன்னல் களை நினைத்துப் பார்த்தால்,

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்"

என்று முன்னுளில் முழங்கிய நாவுக்கரசருடைய அவதாரமே எனது அரசியல் குருவான வ. உ. சி. அவர்கள் என்று சொன்னுல் மிகையாகாது.

# கப்பலோட்டிய தமிழன்

'கப்பலோட்டிய தமிழன்' என்று சொன்ன உடனேயே இப்போதுள்ள தமிழ்நாட்டு மக்களுள் பெரும்பாலோர்க்குக் காலஞ்சென்ற உயர்திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் நினைவுதான் உதிக்கும்.

தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் தமிழர்களுடைய பழங்காலப் பெருமைகளைப்பற்றி சிந்தனை செய்யக்கூடிய வெகு சிலருக்கு, 'கப்பலோட்டிய தமிழன்' என்று சொல்லும்போது நெடுங்காலத்துக்கு முன்னால் தமிழ்நாட்டு மக்கள் கடலோடும் தொழிலில் கைதேர்ந்தவர்களாக இருந்ததும் அவர்கள் கப்பல் ஓட்டிக் கடல்கடந்து எகிப்து, கிரேக்க தேசம், ரோமாபுரி முதலான அன்னிய நாடுகளில் வாணிபம் செய்து ஆதிக்கம் அடைந்திருந்த சரித்திரச் சிறப்புக்களும் கனவுபோல் நினைவுக்கு வரும். பழங்காலத்தில் தமிழர்கள் கப்பலோட்டிக், கடல்கடந்து, அன்னிய நாடுகளிலிருந்து ஏராளமான செல்வத்தையும் கலையறிவையும் சேகரித்து வந்து தமிழர்களுடைய தனி நாகரிகத்தை வளர்த்திருக்கிறதைப்பற்றித் தனியே ஒரு புத்தகம் எழுதித் தருக்கும் அடையலாம். எனினும் இந்தக் 'கப்பலோட்டிய தமிழன்' கதை அந்தப் பழைய சரித்திரத்தைப் பற்றியதல்ல. ஆனாலும் இங்கே சொல்லப்படுகிற 'கப்பலோட்டிய தமிழ'னுக்கும், தம் முன்னோர்களாகிய பண்டைத் தமிழர்கள் கப்பலோட்டிச் செல்வத்தைப் பெருக்கிக் கலைகளை வளர்த்து நல்லரசுநடத்திய வல்லரசுகளாக வாழ்ந்தார்கள்

என்ற நினைவும், அவருடைய கப்பலோட்டும் முயற்சிகளின் மூலகாரணங்களில் ஒன்ருக இருந்தது என்பதை அவருக்குப் பல காரியங்களிலும் பக்கபலமாக உதவிவந்த காலஞ்சென்ற ஸ்ரீ சுப்ரமண்ய சிவா அவர்கள் என்னிடம் சொன்னது இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது.

சிதம்பரம் பிள்ளையவர்களை நினைக்கும்போதே லோகமான்ய பால கங்காதர திலகர்பிரான், அரவிந்தகோஷ், சுப்ரமண்ய சிவா, சுப்ரமண்ய பாரதி, வ. வெ. சுப்ரமண்ய ஐயர், விபின சந்திர பாலர், லஜபதிராய் முதலான பெரும் பெயர்கள் ஒருங்கே நம் மனதில் ஓடிவரும். இவர்கள் அனைவரும் அரசியல் அபிப்பிராயத்தில் ஒரே இனத்தைச் சேர்ந்து உழைத்தவர்கள். விபின சந்திரபாலர் பிற்காலத்தில் மிதவாதியாக இறந்ததையும் அரவிந்தர் அரசியலைத் துறந்ததையும் இங்கே கருதவேண்டியதில்லை. சிதம்பரம் பிள்ளையவர்களை எந்தெந்தக் காரணங்களுக்காக நாம் போற்றுகின்ருேமோ அந்தக் காரணங்களிலெல்லாம் மேற்சொன்னவர்கள் எல்லோரும் ஒரே கொள்கையை மேற்கொண்டிருந்த ஒரு குடும்பம் என்று கூசாமற் சொல்லலாம்.

தமிழ்நாட்டில் தேசீய உணர்ச்சியை ஊட்டி வளர்த்த தந்தை ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை என்பதும்கூட அவருடைய புகழுக்குப் போதாது. பிள்ளையவர்களோடு நான் நெருங்கிப் பழகினவன் அல்லவென்ருலும் அவருடைய உணர்ச்சி உலகத்தில் நான் பலநாள் பழகினவன். காந்தியடிகள் காங்கிரஸ் காரியங்களை மேற்கொள்ளும் வரையிலும் நான் திலகரையே தெய்வம்போற் கொண்டாடினவன். வட நாட்டுக்குத் திலகர் என்ருல் தென்னுட்டிற்குச் சிதம்பரம் பிள்ளைதான். 1907-ல் சூரத்தில் நடந்த காங்கிரஸில் அமிதவாதக் கட்சியென்று அப்போது சொல்லப்பட்ட திலகர் கட்சிக்கும் மிதவாதக் கட்சியென்று சொல்

லப்பட்ட மேத்தா—கோகலே கட்சிக்கும் சச்சரவு உண்டாகி, மிதவாதத் தலைவருள் ஒருவரான ஸ்ரீ ராஷ் பிகாரி கோஷ் அவர்களுடைய தலைமைப் பிரசங்கம் நிகழாமலேயே காங்கிரஸ் கூட்டம் குழப்பத்தில் கலைந்து போனதையும், அப்படிக் கலைந்துபோனது திலகர் கட்சிக்கு வெற்றி என்பதையும் அந்த வெற்றிக்குத் திலகருக்குத் துணையாக நின்றவர் நம் சிதம்பரனார் என்பதையும் கொண்டாடிக் கூத்தடித்த இளைஞர்களுள் நானும் ஒருவன். நெருங்கிப் பழக நேரவில்லை யென்றாலும் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நன்றாக அறிந்து அனுபவித்துக்கொள்ளப் போதுமான சந்தர்ப்பங்கள் இரண்டுமுறை கிடைத்தன.

முதல் முதலில் அவரை நான் காணக் கிடைத்தது சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போன ரயில்வண்டிப் பிரயாணத்தில். காந்தியடிகளின் ஒத்துழையாமைத் தீர்மானத்தை ஆலோசிப்பதற்காக 1919-ல் கல்கத்தாவில் விசேஷ காங்கிரஸ் கூட்டப்பட்டது. அந்தத் தீர்மானத்தில்தான் சாத்வீகத்தையும் சத்தியத்தையும் அடிப்படையாகக்கொண்டு பள்ளிக்கூடங்களைப் பகிஷ்கரித்தல், பட்டம் பதவிகளைத் துறத்தல், நீதி மன்றங்களுக்குப் போவதை நீக்குதல், சட்டமறுப்பு நடத்துதல், முதலான பல முறைகளைப் படிப்படியாக நடத்துவது என்ற கொள்கையை காங்கிரஸ் மேற்கொண்டது. இந்தத் தீர்மானத்துக்கு வெகு பலமான எதிர்ப்புக்கள் திரண்டன. தீவிரவாதிகள் என்று சொல்லப்பட்ட எல்லோரும் இதற்கு விரோதம். அந்த எதிர்ப்புக்குக் காரணம் பட்டம் பதவிகளை விட்டுவிட வேண்டுமே என்பதோ, சட்டமறுப்புச் செய்து கஷ்டப்பட வேண்டுமே என்பதோ அல்ல. பின் என்னவென்றால் அரசியல் சதுரங்கச் சண்டையில் சத்தியத்தையும் அஹிம்சையையும் கட்டாயமாக்கக்

கூடாது என்பதே. அப்படிச் சத்தியத்தையும் சாத்வீகத்தையும் கட்டாயப்படுத்தி மேற்கொள்ளச் செய்தால் நாட்டில் ஆண்மையும் தைரியமும் அருகிப் போய்விடும் என்றே தலைவர்கள் அப்போது நினைத்தார்கள். அன்றியும் போராட்டங்களில்—அது அரசியல் போராட்டமானாலும் சரி அல்லது அன்னியப் போராட்டமானாலும் சரி—'சாம, பேத, தான, தண்டம்' என்று சொல்லப்படுகிற நான்குவித உபாயங்களையும் சமயத்துக்கேற்றபடி உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல் வெறும் சத்தியம் சாந்தம் என்ற வைதிக மனப்பான்மை உதவாது என்பது எதிர்ப்பாளர்களுடைய வாதம். சாம, பேத, தான, தண்டம் என்ற சதுர்வித உபாயங்களைப்பற்றிக் கேட்டுக் கேட்டுச் சொல்லிச் சொல்லிப் பரம்பரையாகப் பழகிவிட்ட பலருக்கும் இந்த வாதம் மிகவும் சரியானதாகத் தோன்றினதால் அந்த எதிர்ப்பு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. இந்த எதிர்ப்பின் பிரதான தலைவர்கள் திலகருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள். ஸ்ரீ திலகர் அப்போது இல்லை. அவர் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடம் கொடுக்கவே மாட்டார் என்பதே இவர்களுடைய நம்பிக்கை. இந்த எதிர்ப்பாளர்களுடைய முன்னணியில் நமது சிதம்பரம் பிள்ளையவர்கள் விளங்கினார். 'எங்கள் மன்னன் திலகர் உயிருடன் இருந்தால் இந்தப் பேடித்தனமான தீர்மானத்தைக் கொண்டுவர இந்தக் காந்தி துணிவாரா?' என்று சிதம்பரம் பிள்ளை கர்ஜித்தார்.

மதிக்கத்தகுந்த காங்கிரஸ் தலைவர்களுள் மிகப் பெரும் பகுதியினரும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்தார்கள் என்றாலும் தீர்மானம் நிச்சயமாக நிறைவேறிவிடும் என்று எதிர்ப்பாளர்கள் ஏங்கும்படியான நிலைமை இருந்தது.

எப்படியென்றால் அப்போது நடந்துகொண்டிருந்த 'கிலாபத்' கிளர்ச்சிக்கு காந்தியடிகள் பரிபூரண ஆதரவு காட்டி இந்திய முஸ்லிம்களுடைய அளவுகடந்த அபிமானத்துக்குப் பாத்திரராகி விட்டபடியால் என்று மில்லாத அளவில் ஏராளமான மகம்மதிய சகோதரர்கள் காங்கிரசில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து அந்த விசேஷ காங்கிரசுக்குப் பிரதிநிதிகளாக வந்தார்கள். இந்துக்களும் மகமதியர்களும் ஏகமனத்துடன் அந்தக் கல்கத்தா காங்கிரசில் கலந்திருந்த கண்கொள்ளாக் காட்சியைப் போல இன்னொருதரம் எங்கேயாவது பார்க்கமுடியுமா என்று என் மனம் பலதடவை பதைபதைப்பதுண்டு.

இந்தக் கல்கத்தா விசேஷ காங்கிரசுக்குச் சென்னையி லிருந்து ஏராளமான பிரதிநிதிகள் சென்றார்கள். அந்தக் காங்கிரஸ் கூடுவதற்குப் பல தினங்களுக்கு முன்னா லிருந்தே தினந்தினம்போகிற கல்கத்தாரயில்வண்டிகளில் பார்வையாளர்களும் பிரதிநிதிகளும் பயணமானார்கள். அந்தச் சாதாரண வண்டிகளில் போனவர்கள் போக அந்தக் காங்கிரசுக்கென்றே இரண்டு தனி வண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஒன்று 'காங்கிரஸ் ஸ்பெஷல்', மற்றொன்று 'கிலாபத் ஸ்பெஷல்'. இந்த இரண்டிலும் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் வித்தியாச மில்லாமல் கலந்து சென்றார்கள். 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டியில் மகம்மதியர்களைக் காட்டிலும் ஹிந்துக்களே அதிகமாக இருந்தார்கள். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் ஏறத்தாழ எல்லோரும் அந்த வண்டியில் தான் இருந்தார்கள். தென்னாட்டுத் திலகரான சிதம்பரம் பிள்ளையவர்களும் அதிலேதான் வந்தார். நாமக்கல்லி லிருந்து ஸ்ரீ நாகராஜ ஐயங்காரும், ஜனாப் பீர்பாட்சா சாஹிபும் நானும் இன்னொருவரும் பிரதிநிதிகளாக நாமக்கல் கிலாபத் கமிட்டியின் ஆதரவில் அனுப்பப்

பட்டோம். நாங்களும் அந்த 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டியில்தான் பிரயாணம் செய்தோம்.

சென்னையிலிருந்து கல்கத்தா சேருகின்ற வரையில் ரயில் வண்டியிலும் கல்கத்தா சேர்ந்தபின் எங்களுடைய ஜாகையிலும் காங்கிரசில் காந்தியடிகளின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்ட நிமிஷம் வரையிலும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்கள் ஓயாமல் அந்தத் தீர்மானத்துக்கு விரோதமாக வாக்களிக்க வேண்டுமென்று சென்னை மாகாணப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே வேண்டிக் கொண்டார். ரயில் வண்டித் தொடரிலுள்ள ஒவ்வொரு வண்டியாக 'கம்பார்ட்மெண்ட் கம்பார்ட்மெண்டாக'ச் சென்று ஸ்ரீ பிள்ளையவர்கள் பிரசாரம் செய்தார். ரயில் வண்டிப் பிச்சைக்காரர்களைப்போல் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி இறங்கி வெவ்வேறு வண்டிகளில் ஏறிக்கொள்வார். அந்த ரயிலில் பிரயாணம் செய்த பிரதிநிதிகள் ஹிந்து, மகம்மதிய, கிறிஸ்துவர்கள் 'எல்லோரும் ஓர்குலம்' 'எல்லோரும் ஓர் இனம்' 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற ஒரே உணர்ச்சியுடன் பிரயாணம் செய்ததால் சாப்பாட்டு நேரம், படுக்கைநேரம் என்று தங்களுடைய 'கம்பார்ட்மெண்ட்'டுக்குப் போகவேண்டுமென்ற அகத்தியம் இல்லாததால் அங்கங்கே உண வருந்தி அங்கங்கே தூங்கி, அங்கங்கே பேசிக்கொண்டே இந்தப் பிரசாரத்தைத் திருப்பித் திருப்பி இடைவிடாது ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை செய்துகொண்டே வந்தார்.

நானிருந்த வண்டிக்கு வந்தார். சிதம்பரம் பிள்ளை மிகவும் இனிமையான சல்லாபி. புதிதாக யாரைச் சந்தித்தாலும் அவர்களுடைய ஊர், பேர், தொழில், குடும்பநிலை முதலான க்ஷேமலாபங்களைப்பற்றிக் கொஞ்சமாவது பேசிவிட்டுத்தான் பிறகு வந்த காரியத்தை வாதிப்பார்.

வாதிப்பதில் மிக்க வல்லவர். பலமான எதிர்வாதம் ஏற்பட்டுக் கடுமையான பதங்களைப் பிரயோகித்து விட்டாலும் கோபங்கொள்ளாமல் முறை தவறிப் பேசாமல் நிதானமாக நியாயங்களை விளக்குவார். நாமக்கல் பிரதிநிதிகளாகிய எங்களுடன் பேசவந்தார். ஒரு நண்பர் எங்களை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார். என்னைப் பற்றிச் சொல்லும்போது நான் கவிபாடத் தெரிந்தவன் என்றும் சொல்லப்பட்டது.

நான் திலகர் இறந்து போனதைப் பற்றிப் பாடியிருந்த இரங்கற் பாட்டுகளின் அச்சடித்த பிரதிகள் எங்களுடன் இருந்தன. திலகரைப் பற்றிய புகழுரை என்றால் சிதம்பரனாருக்குத் தேவாமிர்தம் போன்றது என்பதை அறிந்த ஒரு நண்பர் 'நீங்கள் திலகரைப் பற்றிப் பாடிய சரம கவிகளின் பிரதி இருக்கிறதா?' என்று என்னைக்கேட்டார். நான் பதில் சொல்லி முடிவதற்குள் எங்களுடன் வந்திருந்த வரவராஜ முதலியார் என்ற நாமக்கல் அச்சுக்கூடச் சொந்தக்காரர், (அவர்தாத அந்தப் பாட்டுக்களை அச்சிட்டவர்) எங்கள் மூட்டைகளில் இருந்த அந்த திலகர் சரமகவிகளின் பிரதி ஒன்றைச் சிதம்பரம் பிள்ளையவர்களிடம் கொடுத்தார். அதை வாங்கின பிள்ளையவர்கள் அதிலிருந்து முதல் பாட்டைப் படித்தார். அது:

இடியது விழுந்ததோதான் இரும்பினைப்
பழுக்கக்காய்ச்சி இருசெவி நுழைந்ததோதான்

.............................................

.............................................

திடமுள தீரவீரன் திலகனார்
மாண்டாரென்ற தீயசொல் கேட்டபோது.

அதைமட்டும் படித்துவிட்டு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்

கள் "ஆம், ஆம். உண்மை உண்மை. இடிதான் விழுந்து விட்டது. இடிவிழுந்துதான் நாம் இப்படிக் கதிகலங்கித் தடுமாறுகின்றோம்" என்று ஆரம்பித்து ஒரு நீண்ட பிரசங்கம் செய்துவிட்டு "இந்தப் பாட்டுகளை நிதான மாகப் படித்துப் பார்க்கிறேன்" என்று அதை மடித்துச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு தாம் வந்த காரிய மாகிய காந்தி தீர்மான எதிர்ப்புக்கு எங்கள் ஓட்டுக் களைக் கோரினார். நாமக்கல்லிலிருந்து போன நாங்கள் அத்தனைபேரும் காந்தியின் தீர்மானத்தை ஆதரிக்க வென்றே புறப்பட்டவர்கள். நாங்கள் அப்படிச் செய் வோம் என்று நம்பியும் செய்யவேண்டுமென்று கோரியுமே கிலாபத் கமிட்டியார் எங்களை அனுப்பியிருந்தார்கள், அப்படியிருக்க நாங்கள் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை எப்படி ஆதரிப்போம். ஸ்ரீ நாகராஜ ஐயங்கார் பேசவேயில்லை. நான் இரண்டொரு சந்தேகங்களை மட்டும் கேட்டுவிட்டு எதிர்வாதம் செய்யாமல் சும்மா இருந்துவிட்டேன். ஸ்ரீ வரதராஜ முதலியார் மட்டும பிள்ளையவர்களை எதிர்த்து வாதாடினார். கடைசியாக எங்கள் கோஷ்டியி லிருந்து தம்முடைய கட்சிக்கு ஆள் கிடைக்காதென்று அறிந்துகொண்டு அடுத்த ஸ்டேஷனில் சிதம்பரம் பிள்ளை யும் அவருடன் பிரசாரத்துக்கு வந்த நண்பர்களும் இறங்கி வேறு வண்டிக்குப் போய்விட்டார்கள்.

ஐந்தாறு ஸ்டேஷன்கள் கடந்து ஒரு பெரிய ஸ்டேஷனில் வண்டி நின்றது. முன் சிதம்பரம் பிள்ளை யுடன் எங்கள் கம்பார்ட்மெண்டுக்கு வந்து என் பாட்டு களின் பிரதியைப் பிள்ளையவர்களுக்கு வாங்கித் தந்த நண்பர் மீண்டும் வந்தார். 'சிதம்பரம் பிள்ளை உங்களுடன் பேசவேண்டுமென்று விரும்புகிறார் கொஞ்சம் வாருங்கள்' என்றார். அபிப்பிராய பேதம் எப்படியிருந்தாலும் சிதம்பரம் பிள்ளையவர்களிடத்தில் மட்டற்ற மதிப்பு

வைத்திருந்த நான் அந்த அழைப்பை வெகு ஆர்வத்தோடு ஏற்றுக்கொண்டேன். என்றாலும், கூட இருக்கிறவர்கள் என்ன நினைப்பார்களோ என்று சற்றே தயங்கி நண்பர் நாகராஜ ஐயங்காரைத் திரும்பிப் பார்த்தேன். நாகராஜ ஐயங்காரும் சிதம்பரம் பிள்ளையிடத்தில் அளவற்ற அபிமானமுள்ளவர். சிதம்பரம் பிள்ளையவர்கள் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யை ஆரம்பித்த விவரங்களையும் அதற்குத் திலகர் செய்த உதவிகளையும் அரசியல் விஷயங்களில் திலகருக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் இருந்த தொடர்புகளையும் ஆரம்பகாலத்தில் எங்களுக்கெல்லாம் அடிக்கடி எடுத்துச் சொன்னவர் நாகராஜ ஐயங்கார்தான். திலக மகரிஷி யிடத்தில் தெய்வபக்தியுள்ளவர் நாகராஜய்யங்கார். அரசாங்கம் அப்போது திலகரிடத்தில் கொண்டிருந்த பயத்தாலும் பகைமையினாலும் திலகரைப் பார்க்கப் போவதுகூட ராஜத்வேஷக் குற்றமாகக் கொள்ளக்கூடிய சமயத்தில் சென்னைக்குத் திலகர் வருகிறார் என்பதை அறிந்தஉடனே என்னிடத்திற் கூடச் சொல்லாமல் சேலம் போவதாகச் சென்னைக்குச் சென்று திரும்பிவந்தபின் 'திலகரை தரிசித்துவிட்டேன்' என்று ஜென்ம சாபல்யம் கிடைத்து விட்டவர்போலச் சொல்லிக்கொண்டவர் நாகராஜ ஐயங்கார்......என்னைச் சிதம்பரம் பிள்ளை அழைப்பதாக அந்த நண்பர் சொன்னதைக் கேட்டு தயக்கத்தோடு திரும்பிப் பார்த்த என்னிடம் 'ஏன் போயிட்டு வாயேன்' என்றார் நாகராஜ ஐயங்கார். நான் எழுந்தேன். "என்ன இதைத் தான் மறுபடியும் சொல்லி உங்கள் ஓட்டைக் கேட்கக் கூப்பிட்டிருப்பார். நீங்கள் வழவழ கொழகொழ என்று பேசினதால் உங்களைச் சுலபமாகத் தம் கட்சியில் சேர்த்து விடலாம் என்று எண்ணி தனியே பேசக் கூப்பிட்டிருக்கிறார். ஏன் இப்படி உள்ளதைச் சொல்ல பயந்து சாகி

றீர்கள். கண்டிப்பாக முடியாது என்று சொல்லிவிடு வதற்கென்ன'' என்று வரதராஜ முதலியார் குறுக்கிட் டார். உடனே நாகராஜ ஐயங்கார் "அவன் போயிட்டு வரட்டும், முதலியார்! நீங்கள் சும்மா இருங்கள்'' என்ருர். முதலியார் சும்மா இருந்துவிட்டார். நான் போனேன்.

அப்போது சிதம்பரம் பிள்ளை இருந்த 'கம்பார்ட் மெண்ட்' ஒரு இரண்டாவது வகுப்பு இடம். அவருடைய சொந்த இடம் அந்த வண்டியில்தாஞ என்பதும் எனக்குத் தெரியாது. அந்த ரயில்வண்டித் தொடரிதிருந்த எல்லா வண்டியிலும் எல்லா வகுப்பிலும் எல்லா 'கம்பார்ட் மெண்டி'லும் கொஞ்சம் கொஞ்சம் சிதம்பரம்பிள்ளை பிரயாணம் செய்கிருர் என்பதை அறிந்த நான் அவர் எந்த வகுப்புக்கு டிக்கட் வாங்கியிருந்தார் என்று அறிய முடியவும் இல்லை, அறிய விரும்பவும் இல்லை. அவர் இருந்த அதே கம்பார்ட்மெண்டில் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், ஜியார்ஜ் ஜோஸப் முதலானவர்களும் இருந்தார்கள். என்னைக் கண்டவுடன் சிதம்பரம் பிள்ளையவர்கள் மிகவும் இனிய முகத்துடன் வெகு பரிவோடு வரவேற்று பக்கத்தில் இடம் தந்து இருக்கச் செய்தார். தாம் ஒரு தலைவன், படிப்பில் பட்டம் பெற்றவன், தேசத்திற்காகக் கடுமை யான சிறைவாசம் செய்து அரிய பெரிய தியாகங்களைச் செய்தவன், மற்ற மனிதர்களிடத்தில் இல்லாத பல சிறப்புக்கள் தம்மிடம் உண்டு என்பதான அகந்தை எண் ணங்கள் ஒரு சிறிதும் இல்லாத சிலருள் ஒருவர் சிதம்பரம் பிள்ளை. குழந்தையைப்போலக் குழைந்து பேசி என்னுடன் குலவினுர். 'ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே' என்றதன் உண் மையை அவரிடத்தில் அப்போது கண்டேன். நெடுநாள்

பழகினவர்போல சிதம்பரம் பிள்ளை என்னுடன் பேசு வதைக்கண்ட ஆச்சாரியார் அதிசயம் அடைந்தவர்போல 'ராமலிங்கம் பிள்ளையை உங்களுக்குத் தெரியுமா?' என்று சிதம்பரம் பிள்ளையைக் கேட்டார். உடனே பிள்ளையவர்கள் 'நன்றாகத் தெரியும். இதோ பாருங்கள்' என்று தம் கையில் இன்னும் விரித்தபடியே வைத்துக் கொண்டிருந்த நான் பாடிய திலகர் சரமகவிகளின் அச்சுத்தாளை ஆச்சாரியாரிடம் நீட்டினார். அதை வாங்கிப் பார்த்துவிட்டு ஆச்சாரியார் 'ஓ! இதுவா? இது உங்களுக்கு மிகவும் பிடிக்கும்' என்றார். அந்தப் பாட லின் பிரதியை நானே முன் ஆச்சாரியாருக்கு அனுப்பி யிருந்தேன். அவரும் அவற்றை மிகவும் பாராட்டிக் கடிதம் எழுதியிருந்தார். நான் ஏதாவது புதுப் பாட்டுக் களைச் செய்தால் அவற்றை அப்போதைக்கப்போது ஆச்சாரியாருக்கு அனுப்புவதுண்டு. அவர் அதற்குப் பாராட்டுகளை எழுதுவார். அப்படி நானாக அவருக்கு அனுப்பத் தவறினாலும் என்னுடைய பாட்டு என்று பத்திரிகைகளில் வெளியான எதையும் விரும்பிப் படித்துத் தாமே எனக்கு விமர்சனம் எழுதுவார். இது எங்களுக் குள் இருந்துவந்த தொடர்பு.

சிதம்பரம் பிள்ளை குலுங்கச் சிரித்துக் குதூகலம் மிஞ்சத் தமமுடைய இயல்பான கலகலத்த பேச்சில் கணீர்கணீரென்று சொற்களைக் கொட்டி என் கவிகளைப் புகழ்ந்தார். ஆச்சாரியார் பக்கம் திரும்பி "நானும் திலகரைப்பற்றி இரங்கற் பாட்டுகளைப் பாடினேன். இப்படி அமையவில்லை. உண்மையான கவித்திறம் எல்லோருக்கும் வருவதல்ல" என்று சொன்னபோது என் உடல் மயிர்க்குச் செறிந்து உள்ளம் பூரித்து கூச்சம் உதித்துக் குனிந்துகொண்டேன். என்னிடத்தில் உண்மைக் கவித்திறம் இருப்பதாக நான் எண்ணி எதையும் செய்த

தில்லை. அப்படி எண்ணி இறுமாப்படைந்துவிடக் கூடா தென்பது எனக்குக் கிடைத்த சத்சகவாசங்களினால் என் மனதில் எப்போதும் இருந்துவந்திருக்கிற ஒரு பிரார்த் தனை. என்றாலும் சிதம்பரம் பிள்ளையைப் போன்ற ஒரு சிறந்த தேசபக்தர், தியாகமூர்த்தி திலகர்பிரானுடைய பிரதம சிஷ்யர்களுள் சிறப்புற்ற ஒருவர், அன்னை பாரத தேவியின் விடுதலைக்காக மிகவும் கொடுமைகள் நிறைந்த சிறைவாசம் செய்து அருந்தவமாற்றிய அண்ணல், ஆழ்ந்த தமிழ் ஆராய்ச்சியுள்ள அறிஞர் அப்படி என்னைப் புகழ்ந்து தம் கவிகளைக் காட்டிலும் என் கவிகளில் உண்மைக் கவித்திறமிருப்பதாகச் சொன்னபோது நான் ஆனந்த பரவசம் அடைந்துவிட்டது அதியம் அல்ல. அப்போது என் வயது முப்பத்துமூன்று, பிள்ளையவர்க ளுடைய வயது நாற்பத்தெட்டு. வயசிலும் கல்வியறி விலும், அனுபவத்திலும், தேச பக்தியிலும் தியாகத்திலும் என்னைக்காட்டிலும் எவ்வளவோ பெரியவரான அவர் தம்முடைய கவியைக்காட்டிலும் என்னுடைய கவி உண்மைக் கவித்திறம் உள்ளது என்று சொன்னது அவருடைய சான்றாண்மைக்கு அறிகுறி என்று இன்றளவும் நான் எண்ணியெண்ணி இன்புற்று வருகிறேன். 'சால்புக்குக் கட்டளை யாதெனின் தோல்வி துலையல்லார்கண்ணும் கொளல்' என்ற தெய்வத் திரு வாக்கின் உண்மையை அப்போது அவரிடம் கண்டேன். அதுவரையிலும் வெறும் தேசபக்திக்காகவும் தியாகத்துக் காகவும் மட்டும் அவரிடத்தில் எனக்கு இருந்துவந்த நன்மதிப்பு அந்த நிமிஷம் முதல் அதிகப்படலாயிற்று. என்னைப் புகழ்ந்து விட்டார் என்பதற்காக அல்ல. தம்மைக் குறைத்துக்கொண்டார் என்பதற்காகவே. என் கவியைமட்டும் புகழ்ந்துபேசி அத்துடன் விட்டிருக்கலாம். அது சாதாரணமாக மற்றவர்கள் செய்திருப்பார்கள்.

ஆனால் சிதம்பரனார் தம்முடைய கள்ளமற்ற உள்ளத்தின் பெருமையினால் தம்மைக் குறைத்தும் என்னைப் புகழ்ந்தும் பேசினார். தன்னலமற்ற பெரியவர்களின் தன்மைக்கு அது ஒரு சாட்சி.

பிறகு வெகுநேரம் அவரும் ஆச்சாரியாரும் கவித்துவத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆச்சாரியார் அப்போது என்னைப்பற்றியும் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரைப் பற்றியும் பிள்ளையவர்களுடன் பேசினார் என்பதை என் காதில் விழுந்த இரண்டொரு வார்த்தைகளால் அனுமானித்தேன். அவர்கள் பேசிக்கொண்டதின் பெரும் பகுதியும் என் காதுக்கு எட்டவில்லை. கடைசியாக உரத்த குரலில் சிதம்பரம் பிள்ளையவர்கள் 'அந்த மன்னன் பாரதியை நினைத்தால்' என்று சொன்னது மட்டும் என் நினைவில் இன்றும் நிற்கிறது. அதன் தொடர்ச்சியாகக் குறைந்த குரலில் அவர் என்ன சொன்னாரோ அவை என் செவிட்டுக் காதுக்குச் சிக்கவில்லை. ஆனால் ஆச்சாரியாருடன் பேசும்போது சிதம்பரம் பிள்ளையவர்கள் அடிக்கடி என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்ததனால் அவர்களுடைய பேச்சு என்னையும் பற்றியதாகத்தான் இருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டேன்.

இந்தப் பேச்சு முடிந்தும் முடியாமலும் இருக்கும்போது, டாக்டர் ராஜன் முதலானவர்கள் உட்கார்ந்திருந்த எதிர் வரிசையிலிருந்து அவர்களுக்குள் ஒருவர் தம் கையில் வைத்திருந்த ஏதோ அரசியல் சம்பந்தமான ஒரு காகிதத்தைப் பார்க்க ஆச்சாரியாரை அழைத்ததனால் ஆச்சாரியாரும் மற்றவர்களும் அதிலே கவனம் செலுத்தலானார்கள்.

சிதம்பரம் பிள்ளை என்பக்கம் திரும்பி உட்கார்ந்தார். "உங்கள் பாட்டு மிகவும் நன்றாக இருக்கிறது. உணர்ச்சி

வேகம் பொங்கி வருகின்றது. அதைப் படித்துப் பரவச மடைந்தேன். அதைச் சொல்லத்தான் உங்களை அழைத்தேன்'' என்றார். உண்மையும் அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று அறிந்தேன்.

ஆனாலும் தனியே பேசச் சந்தர்ப்பம் கிடைத்ததை நழுவ விடக்கூடாது என்று நினைத்தோ என்னவோ சற்றே தயக்கத்துடன் தம்முடைய காந்தித் தீர்மான எதிர்ப்புப் பிரசாரத்தை ஆரம்பித்து, சில நிமிஷங்கள் அந்தத் தீர்மானத்தினால் வரக்கூடிய தீமைகளைத் தெளிவாகச் சொல்லிவிட்டு, திலகர் அந்த சமயத்தில் இல்லாமற் போனதையும் நினைப்பூட்டி என் அபிப்பிராயத்தை அறிய விரும்பினார். நான் அவர் சொன்னதையெல்லாம் வெகு அனுதாபத்தோடு தலையை அசைத்துக் கேட்டுக்கொண்டு பதிலே பேசாமல் இருந்தேன். அவருடைய வாதத்திலுள்ள குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டி எதிர்வாதம் செய்ய எத்தனையோ விஷயங்கள் என் மனதில் எழுந்தன. ஆனாலும் அவருடன் எதிர்த்துப் பேசி வாதாடமட்டும் தைரியம் வரவில்லை. அவருடைய வாதங்கள் மிகவும் திறமை வாய்ந்தவை. எதிரியை எளிதில் மடக்கிவிடக் கூடிய ஆற்றல் அவரிடம் அதிகம் இருந்ததை அறிந்தேன். அவர் சொன்ன சில ஆணித்தரமான காரணங்கள் மறுக்க முடியாதனவென்றே அப்போது என் மனதில் பட்டது. திலகர் உயிருடன் இருந்தால் இந்த திட்டத்திற்கு உடன்படுவாரா என்பது எனக்கும் ஒரு சந்தேகமாகத்தான் இருந்தது. திலகரின் மீது எனக்கிருந்த பக்தி எள்ளளவும் அப்போது குறைந்துவிடவில்லை. இருந்தாலும் வெறும் கண்மூடித்தனமாகத்தானே என் உள்ளத்தை முற்றிலும் காந்தியிடம் பறிகொடுத்துவிட்டவனாக இருந்தேன். காந்தியவர்களிடத்தில் எனக்கிருந்த அபார நம்பிக்கையால், காந்தீயத்தால் இந்த நாட்டிற்கு மிகவும் தீமை விளையும்

என்பதை விடாப்பிடியாகப் பேசி ஓய்வு ஒழிச்சலில்லாமல் பிரசாரம் செய்துவந்த சிதம்பரம் பிள்ளையிடம் என்னுடைய காந்தி பக்தியைச் சொல்லிக்கொண்டு அவருடைய அதிருப்திக்கு ஆளாக என் மனம் துணியவில்லை. காந்தியடிகளிடத்தில் எனக்கு ஏற்பட்டுவிட்ட அளவற்ற நம்பிக்கையும், திலகரிடத்தில் எனக்கிருந்த தெய்விக பக்தியும், சிதம்பரம் பிள்ளையவர்களிடத்தில் எனக்கிருந்த நன்மதிப்பும் அத்துடன் அவர் தம் கவிகளைக் குறைத்து என் கவிகளைப் புகழ்ந்துவிட்ட புதுப் பூரிப்பும் எல்லாம் சேர்ந்து ஒன்றோடொன்று பின்னிப் பிணங்கி அருட்டி மருட்டி என்னைக் குழப்பிவிட்டன. சிதம்பரம் பிள்ளையோ அடுத்தடுத்து என் அபிப்பிராயம் என்னவென்று கேட்டுக்கொண்டே இருந்தார். தட்டிப் பேசவோ தைரியம் இல்லை. ஒத்துப்போகவோ உள்ளம் உடன்படவில்லை. திண்டாடித் திணறிப் போனேன்.

கடைசியாக அவரிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு சூழ்ச்சி செய்தேன். அது சூழ்ச்சிதான். ஆனால் அதில் பொய்யோ பித்தலாட்டமோ இல்லை. அதில் என் உள்ளக் கருத்தை உள்ளபடி சொல்லிவிடத் துணிவில்லாமற் போன குற்றம் இருந்தாலும் அதில் மனச்சாட்சி வருந்தக் கூடிய பாபம் ஒன்றுமில்லையென்று கண்டு அதை உபயோகப்படுத்திக் கொண்டேன்.

அவருடைய விவாதங்களைக் கேட்டுக்கொண்டே அவருக்கு என்ன விடையளிப்பது, எப்படி விடுபடுவது என்பதைப் பற்றி எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்த என்னைப் பார்த்து, "என்னுடைய ஆர்கியுமெண்ட்களுக்கு உங்கள் உடன்பாடில்லையா?" என்றார்.

அதற்கும் நான் பேசாமலிருந்தேன். என்னைச் சும்மா விட்டுவிடும்படி அவருடைய இரக்கத்தை வேண்டுகின்ற

வன்போல் அவரைப் பார்த்தேன். அந்த விண்ணப்பப் பார்வை வெற்றி பெற்றதைப்போல், அவர், "நான் சொல்லுவது உங்களுக்கு விருப்பமில்லையானல் கூசாமல் சொல்லுங்கள். உங்களைக் கசக்க வேண்டுமென்று நான் கருதவில்லை" என்ருர்.

தாங்கள் சொல்லுவதெல்லாம் சரியா அல்லவா என்று நான் தீர்ப்புச் சொல்வது சரியல்ல. ஆனல் நான் காந்தியாருடைய தீர்மானத்தை ஆதரிப்பதாக வாக்களித்துவிட்டேன்" என்றேன்.

"வாக்களித்து விட்டீரா! யாருக்கு? இப்படிப் பட்ட விஷயங்களில் எந்த நிமிஷத்திலும் நம்முடைய அபிப்பிராயங்கள் மாறலாம். அப்படி மாற்றிக்கொண்டு சமயத்துக் கேற்றபடி ஓட் செய்யும் தீர்ப்பு நம் உரிமையல்லவா?" என்பனபோன்ற பல விஷயங்களைச் சொல்லி என் வாக்குறுதிகளை நான் மீறிவிடுவது அரசியல் விஷயங்களில் அதர்மம் ஆகாது என்று ஆலோசனை சொல்வது போல் பேசினர்.

"நானும் ஸ்ரீ நாகராஜய்யங்காரும் இன்னும் இரண்டு முஸ்லிம் சகோதரர்களும் நாமக்கல் பிரதிநிதிகளாக அங்குள்ள 'கிலாபாத்' கமிட்டியின் சார்பாகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருக்கிறோம். காந்தியின் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றே எங்களை முற்றிலும் நம்பி அவர்கள் அனுப்பியிருக்கிருர்கள். அந்த நம்பிக்கைக்கு விரோதமாக எதையும் செய்வது துரோகம் ஆகுமே என்றுதான் அஞ்சுகிறேன்" என்றேன்.

இதைச் சொன்ன உடனே சிதம்பரம் பிள்ளை கலகலவென்று சிரித்து என் கையைப் பிடித்துக் குலுக்கி "சபாஷ் புலவரே, உங்கள் உண்மைத் தன்மையை நான் மிகவும் மெச்சுகின்றேன். மனமார வாழ்த்துகிறேன். நீங்கள் உங்களை அனுப்பினவர்களுடைய

நம்பிக்கைக்கு துரோகம் செய்யக்கூடாதென்று நினைப்பது மிகவும் உயர்வான நோக்கம். அப்படியே செய்யுங்கள். அதுதான் சரி. நான் உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாது" என்று அந்த பேச்சை முடித்துவிட்டார். நான் என் சங்கடங்களிலிருந்து விடுதலை யடைந்து சந்தோஷம் அடைந்தேன்.

இந்த நிகழ்ச்சி ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையாகிய இந்தக் கப்பலோட்டிய தமிழனுடைய நேர்மைக்குணத்தின் சிறப்பை என் நினைவில் பதிய வைத்தது. (மேலே சொன்ன சம்பாஷணையில் அடங்கியுள்ள கருத்துகள் அத்தனையும் உண்மை. ஆனால் இருபத்தெட்டு ஆண்டு களுக்கு முன்னால் நடந்த இந்தப் பேச்சுகளில் நாங்கள் பிரயோகித்த பதங்கள் இவை தானா என்று சொல்ல முடியாது)

அடுத்த ஸ்டேஷனில் நான் சிதம்பரம் பிள்ளை இருந்த வண்டியை விட்டிரங்கி எங்கள் இருப்பிடத் துக்கு வந்தேன். நடந்ததை யெல்லாம் நாகராஜ ஐயங் காரிடம் சொல்லி சிதம்பரம் பிள்ளை, திலகர் உயிருடன் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடம் கொடுக்க மாட்டார் என்று விவாதித்த விவரங்களையும் சொன்னேன். அதற்கு நாகராஜ ஐயங்கார் சிதம்பரம் பிள்ளை சொன்ன விஷயங்களுக்கெல்லாம் மறுப்புச் சொல்லி திலகர் இருந்தால் கட்டாயம் காந்தியை ஆதரிப்பாரே யல்லாமல் எதிர்க்கமாட்டார் என்று கண்டிப்பாகச் சொன்னார். திலகரைப்பற்றி எனக்கிருந்த சந்தேகமும் தெளிந்து விட்டதுபோல நிம்மதியடைந்தேன்.

கப்பலோட்டிய தமிழனை சந்தித்துப் பேசின சம்பவத் தால் அவருடைய கல்வித்திறமையையும், வாதிப்பதில் அவருக்கிருந்த வல்லமையையும், சமத்துவ எண்ணத்யையும்

சரச சல்லாப குணத்தையும், நேர்மையைப் பாராட்டும் நெறியையும் நான் நேராக அறிந்துகொள்ள நேரிட்டது.

அதே ரயில் வண்டிப் பிரயாணத்தில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய திடசித்தத்தையும் போர்க்குணத்தையும் தெரிந்துகொள்ளவும் ஒரு நிகழ்சி நேர்ந்தது.

நாங்கள் பிரயாணம் செய்த 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டி சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து, வழக்கமாக தினந்தினம் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகிற 'கல்கத்தா மெயில்' வண்டி புறப்படுவதற்கு ஆறு மணி நேரத்திற்கு முன்னால் புறப்பட்ட வண்டி. மெயில் வண்டியைப்போல் அல்லாமல் அநேக சிறிய ஸ்டேஷன்களிலும் நின்று அங்கங்கே காத்திருந்த காங்கிரஸ் கிலாபத் பிரதிநிதிகளையும் ஏற்றிக்கொண்டுபோக வேண்டியிருந்ததால் மெயில் வண்டியைவிட அதிக நேரம் பிரயாணம் செய்ய வேண்டிருந்தது. இரண்டு இரவும் கிட்டத்தட்ட இரண்டு பகலும் ஓடி மூன்றாவது நாள் காலை பத்து மணிக்கு கல்கத்தா சேரும்படியாக 'ஷெடியூல்' செய்யப்பட்டது.

கல்கத்தாவுக்கு முன்னால் கரக்பூர் என்ற பெரிய ஸ்டேஷனில் எங்கள் 'ஸ்பெஷல்' நின்றது. நின்றது நின்றதுதான். சுமார் மூன்று மணி நேரத்துக்கு மேல் அங்கே நிற்கப் போட்டு விட்டார்கள். ஏன் இவ்வளவு நேரம் இங்கே நிறுத்திவிட்டார்கள் என்ற பரபரப்பு எங்களுக்கு உண்டாயிற்று சில தீவிர வாதிகள் ஏன் இப்படிக் காக்கப் போட்டு விட்டார்கள் என்று 'கார்டு' துரையைக் கேட்டார்கள். அவர் 'ஸ்டேஷன் மாஸ்டரை'க் கேட்கச் சொன்னார். 'ஸ்டேஷன் மாஸ்டரை'க் கேட்டார்கள். அவர் கல்கத்தாமெயில் வண்டி பின்னால் வந்துகொண்டிருப்பதாகவும் அந்த மெயில் இந்தஸ்டேஷனுக்கு

வந்து எங்கள் ஸ்டேஷனுக்கு முன்னால் புறப்படும் என்றும் அது புறப்பட்டுப் போனபின் அரைமணி நேரத்துக்கு அப்புறம்தான் எங்கள் வண்டி புறப்படும் என்றும் சொன்னார். இதைக் கேட்ட தீவிர தேச பக்தர்களுக்கு கோபம் வந்து விட்டது. 'என்ன! அந்த மெயில் வண்டிக்கு ஆறு மணி நேரத்துக்கு முன்னால் புறப்பட்ட எங்களை அனுவசியமாக இங்கே மூன்று மணிக்குமேல் காக்கப்போட்டு, எங்கள் வண்டிக்கு முன்னால் மெயிலைப் போகவிடுவதென்றால் இதைவிட எங்களுக்கு அவமதிப்பு இன்னும் என்ன இருக்கிறது' என்று அந்த ஸ்டேஷன் மாஸ்டரோடு ரகளை செய்ய ஆரம்பித்தார்கள். இந்தக் கூச்சல் 'கப்பலோட்டிய தமிழன்' காதில் விழுந்தது. அவர் வண்டியை விட்டு இறங்கி வெகு வேகமாக ஓடி விசாரித்தார். விஷயத்தை அறிந்தவுடன் ஸ்டேஷன் மாஸ்டரோடு சண்டை போட்ட கட்சிக்குத் தாமே தலைவராகிவிட்டார். மற்றவர்களையெல்லாம் கையமர்த்திவிட்டு சிதம்பரம் பிள்ளையே அந்த வழக்கை வாதித்து 'எங்கள் வண்டிக்கு முன்னால் மெயில் வண்டியைப் போகவிடமாட்டோம். எங்கள் வண்டிக்கு அரை மணி நேரத்துக்குப் பின்னால் தான் மெயிலை விடவேண்டும். எங்கே! அந்த மெயில் வண்டி. எங்களுக்கு முன்னால் எப்படிப் போய்விடும் என்பதைப் பார்த்துவிடுகிறோம்' என்று சவால் விடுத்தார்.

அதற்கு அந்த 'ஸ்டேஷன் மாஸ்டர்' 'அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் என்ன செய்வேன். எனக்குக் கிடைத்துள்ள உத்தரவுப்படிக்குத்தான் நான் என் கடமையைச் செய்யவேண்டும். மெயில் வண்டி முன்னால் போகவேண்டுமென்று உத்தரவு செய்தது நானல்ல' என்றார். அதற்குச் சிதம்பரம் பிள்ளை 'மெயில் வண்டி முன்னாலோ போகட்டும் பின்னாலோ போகட்டும். அதைப்

பற்றி அக்கரையில்லை. எங்களை எதற்காக இங்கே அனுவசியமாக மூன்று மணி நேரத்துக்கு மேல் காக்கப் போட்டீர்கள்? இந்த மூன்று மணி நேரமும் வண்டி ஓடியிருந்தால் இன்னேரம் நாங்கள் கல்கத்தா போய்ச் சேர்ந்திருப்போம் அல்லவா?' என்ருர்.

அதற்கு ஸ்டேஷன் மாஸ்டர் 'ஆம். இது சரியான கேள்விதான். ஆனல் உங்கள் வண்டியை இங்கே மூன்று மணி நேரம் காக்கப்போடவேண்டுமென்பது ஏற்பாடல்ல அது எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்டது. இந்த ஸ்டேஷனில்தான் மெயில் வண்டி உங்கள் வண்டியைத் தாண்டி முன்னல் போகவேண்டும் என்பது 'டிராபிக் மானேஜருடைய உத்திரவு.' மெயில் வண்டி இன்றைக்கு சுமார் மூன்று மணி நேரம் 'லேட்' அதனல் இந்த சங்கடம் ஏற்பட்டுவிட்டது என்ன செய்யலாம்' என்ருர்.

'என்ன செய்யலாம். எங்கள் வண்டியை உடனே விடலாம். மூன்று மணி நேரம் 'லேட்' ஆன மெயில் வண்டி இன்னும் கொஞ்சம் லேட் ஆகிவிட்டால் என்ன முழுகிப்போகும்? எங்கள் வண்டியைவிடச் சொல் லுங்கள்' என்று கப்பலோட்டிய தமிழன் கர்ஜித்தார்.

'அப்படிச் செய்ய எனக்கு அதிகாரமில்லை' என்ருர் ஸ்டேஷன் மாஸ்டர்.

'அப்படிச் செய்ய உங்களுக்கு அதிகாரம் இல்லை யென்ருல் எப்படிச் செய்வது சரியென்று எங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறேம்' என்று சொல்லிக் கொண்டே சிதம்பரனர் வண்டியை நோக்கி வந்தார். இதற்குள் வண்டியில் இருந்த எல்லா இளைஞர்களும் இறங்கி வந்து சிதம்பரம் பிள்ளையைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களைப் பார்த்து சிதம்பரம் பிள்ளை ஒரு சிறு பிரசங்கம் செய்து 'சரி அந்த மெயில் வண்டி நம்முடைய வண்டிக்கு முன்னல் போகக்கூடாதென்று

நாமெல்லாரும் மெயிலுக்கு முன்னுல் தண்டவாளத்தில் உட்கார்ந்துகொண்டு சண்டித்தனம் செய்வோம். மெயில் எப்படி முன்னுல் போய்விடும் பார்ப்போம்' என்றூர். (அப்போது சண்டித்தனம் என்ற பதம்தான். 'சத்யாக்ரகம்' என்ற சொல் அப்போது வழக்கத்துக்கு வரவில்லை) உடனே சிதம்பரம் பிள்ளையினுடைய கட்சிக்கு ஏராளமான ஆள்கள் சேர்ந்துவிட்டார்கள். எனக்குத் தெரிந்த யாரார் அதில் சேர்ந்தார்கள் யாரார் சேரவில்லை என்பது இப்போது என் நினைவில் இல்லை. ஆனுல் ராஜகோபாலாச்சாரியாரும் அவருடன் சேர்ந்த ஒரு சிறு கோஷ்டியும் அப்படிச் செய்வது சரியல்லவென்று சிதம்பரம் பிள்ளைக்கு மாறுபட்டார்கள் என்பதை நான் இன்னும் மறக்கவில்லை. எனது நண்பர் நாகராஜ ஐயங்கார் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்த அத்தனை பரபரப்பிலும் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. ஸ்டேஷன் மாஸ்டருக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் நடந்த வாக்கு வாதத்துக்கு முன்னுலிருந்தே இந்த விவகாரம் ஆரம்பமானதிலிருந்து அதன் முன்னேற்றத்தையும் முடிவையும் அறிந்து கொள்ள வெகு ஆசைப்பட்ட நான் அடிக்கடி வண்டியை விட்டு இறங்குவதும் மீண்டும் வந்து அதில் ஏறி வண்டியை விட்டு இறங்காமலிருந்த நாகராஜய்யங்காருக்கு நடக்கிற விவாதங்களின் விவரங்களைச் சொல்லுவதுமாக இருந்தேன். சிதம்பரம் பிள்ளை வண்டிக்கு முன்னுல் சண்டித்தனம் செய்ய ஆள் திரட்ட ஆரம்பித்ததை அறிந்த உடன் நாகராஜ ஐயங்கார், வண்டியை விட்டிறங்காமல் வண்டிக் கதவண்டை வந்து நின்று கொண்டு, பிளாட்பாரத்தில் சண்டித்தனம் செய்யப் போகிறவர்கள் கும்பலில் நின்றுக்கொண்டிருந்த என்னைக் கைகாட்டி அழைத்தார். நான் போனேன். இரண்டு

பேரும் உள்ளே போய் எங்கள் இருப்பிடத்தில் உட்கார்ந்தோம். நாகராஜன் என்னைப் பார்த்து, 'ராம லிங்கம் நீ இந்த ரகளையில் சேராதே. மெயில் வண்டிக்கு 'மெயில்' என்ற முறையில் நியாயமாகக் காட்ட வேண்டிய மரியாதைக்காக அதை முன்னால் போகவிடுவதில் அநியாயம் ஒன்றுமில்லை. இப்போதிருக்கிற வேகத்தில் அந்த நியாயத்தை நாம் சொன்னால் கேட்கமாட்டார்கள். யாரோ எப்படியோ செய்யட்டும் நீ மட்டும் இதில் சேராதே' என்று கண்டித்தார்.

நான் பிளாட்பாரத்தில் சிதம்பரம் பிள்ளையின் கட்சி ஆதரிக்கும் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தது அவருடைய கட்சியை ஆதரித்துவிட்டதனால் அல்ல. ஆனால் அதில் சேரலாமா வேண்டாமா என்று என்னுள் குழம்பிக்கொண்டுதான் கும்பலோடு நின்றுகொண்டிருந் தேன். சிதம்பரம் பிள்ளை ஸ்ரீ திலகருடைய மதிப்பிற்குரிய தேசபக்தர் என்பதனால் எனக்குப் பிள்ளையவர்களிடத்தில் இருந்த பிரியத்துக்காக மட்டுமாவது அவர் கட்சியில் சேரத்தான் ஆசை உதித்தது. ஆனால் காந்தியடிகளின் தெய்விகத் தன்மையில், என்னையறியாமலும் என் மனதில் உதித்து உரம்பெற்றுவிட்ட காந்தி பக்தியும், அந்த காந்திக்கு விரோதமாக சிதம்பரம் பிள்ளையவர்கள் பிரசாரம் செய்து வருகிறாரே என்ற வருத்தமும் அந்த ஆசையைத் தடுத்தன. உண்மையைச் சொன்னால் அப்போது என்னுடைய வாலிபத் துடிப்புகள் என்னைச் சிதம்பரம் பிள்ளையோடு சேரத்தான் வற்புறுத்தின. அப்படிக் குழம்பிக்கொண்டே கூட்டத்தில் நின்று கொண்டிருந்த என்னைக் கூப்பிட்டு நாகராஜய்யங்கார் 'நீ மட்டும் இதில் சேராதே' என்று சொன்னபோது ஒரு எதிர்ப்பு உணர்ச்சிதான் எழுந்தது. நாகராஜ ஐயங்காரோடு கொஞ்சம் தர்க்கம் செய்தேன். எவ்வளவு

தர்க்கம் பேசியும் அவர் இடம் கொடுக்கவில்லை. நாகராஜ ஐயங்கார் பிள்ளைப் பருவம் முதல் பிரியாத சகபாடி. நானும் அவரும் சமரசமான சல்லாபிகள். வாடா போடா என்றுதான் எங்களுக்குள் வழக்கம். எல்லா விஷயங்களிலும் அவருடன் எதிர்ப்புப் பேசுவதில்தான் எனக்கு இச்சை. இருந்தாலும் அவரது மாசற்ற வாழ்க்கையும் மருவற்ற ஒழுக்கமும், பகைமை பாராட்டுகிறவர்களுக்கும் நன்மையே செய்கிற அபூர்வ பண்பும், அவமரியாதையாகப் பேசி புண்படுத்தி விடுகிறவர்களிடத்திலும் அவர் காட்டும் பொறுமையும் எனக்கு அவரிடத்தில் ஒருவித பயபக்தியை உண்டாக்கியிருந்தது. அதனால் ஆரம்பத்தில் நான் எவ்வளவு ஆவேசத்தோடு எதிர்த்து வாதாடினாலும் கடைசியில் அவருக்கு அடங்கிப் போவதே வழக்கம். காந்தீய சாத்விகத்தில் எனக்கு வந்த கவர்ச்சியும் அதனால் என்னுள் உதித்த கவிதைகள் களங்கமற்ற சாந்த வாசனை கமழ்ந்துகொண்டே வளர்ந்து வரக் காரணமும் இயல்பாகவே சாந்த குணம் நிறைந்திருந்த நாகராஜய்யங்காருடைய சகவாசத்தினால் என்றால் அது வெறும் சத்தியம்தான், சம்பிரதாயத்துக்காகப் புகழ்வதல்ல.

ஆதலால் என்னுடைய ஆசையையும் அபிப்பிராயத்தையும் ஒதுக்கிவிட்டு நாகராஜன் சொன்னதை ஒத்துக்கொண்டேன்.

வேடிக்கையைப் பாருங்கள். திலகர்பிரானையும் அவருடைய பிரதம சிஷ்யர் என்பதற்காக சிதம்பரம் பிள்ளையவர்களையும் என்னேரமும் புகழ்ந்து போற்றியதனால், வெகு சுலபமாகச் சிதம்பரம் பிள்ளையின் கட்சியில் சேர்ந்துவிட வேண்டிய நானும் நாகராஜ ஐயங்காரும் இன்னும் சிலருமே அதில் சேராதிருக்க, காந்தியடிகளை மிகவும் ஆதரித்து, காந்தியின் 'சாத்வீக

ஒத்துழையாமை' தீர்மானம் நிறைவேறக் கூடாதென்று நெடுக பிரசாரம் செய்துவந்த சிதம்பரம் பிள்ளையை நேர்ந்தபடியெல்லாம் எதிர்த்துப் பேசி சண்டையடித்துக் கொண்டே வந்தவர்களில் முதல்வராக இருந்த எங்களுடன் வந்த வரதராஜுலு முதலியாரும் அவருடன் சேர்ந்து பேசின மற்றவர்களும் மெயில் வண்டிக்கு முன்னால் தண்டவாளத்தில் படுத்துக்கொள்ளுகிற கட்சியில் தாராளமாகச் சேர்ந்து கொண்டார்கள். சாத்விக இயக்கத்தை ஆரம்பிக்கப் போகிற காந்தியடிகளுக்குச் சாதகமாக 'ஓட்' போடுவதற்கென்றே சத்தியம் செய்துகொண்டு வந்திருப்பதாக சிதம்பரம் பிள்ளையுடன் வாது பேசினவர்களுள் பெரும்பாலோரும் எங்கள் ரயில் வண்டி மெயில் வண்டிக்கு முன்னால் போகவேண்டும் என்பதற்காக அப்போது எழும்பின கோஷங்களையும் கோபதாபப் பேச்சுக்களையும் இப்போது நினைத்தாலும் துணுக்கமுண்டாகிறது. சாத்விகத்தையும் சத்தியத்தையும் எழுத்தாலும் சொல்லாலும் எவ்வளவு போற்றுகின்றோம். ஆனால் செயலில் மட்டும் எவ்வளவு மாற்றுகின்றோம் என்பது, காந்தீயத்தில் இருபத்தெட்டு வருஷங்கள் ஊறிக்கிடந்த பிறகும் இன்றைக்கு இருக்கிற உண்மையைப் பார்க்கிறபோது, உலகப் போக்குக்கு ஒத்துக்கொள்ளாத இயக்கம் என்று அதை பலபேர் எதிர்த்த அந்த ஆரம்பகாலத்தில் அப்படி இருந்ததில் அதிசயமில்லை. சிதம்பரம் பிள்ளையின் படையில் பலர் சேர்ந்தார்கள். அந்தச் சேனைக்குத் தலைவனாக சிதம்பரம் பிள்ளையவர்கள் விளங்கிய வீராவேசத் தோற்றம் அடிக்கடி என் மனக்கண்ணின் முன்னால் மலர்வதுண்டு.

வெள்ளைக்காரனுடைய அதிகாரக் கோட்டையை இடித்தெறியப் படையெடுத்துவிட்ட சேனைக்குத் தலைவன் போல கப்பலோட்டிய தமிழன் சிதம்பரம்

பிள்ளை வெகு களிப்புடன் அன்றைக்கு நின்ற அந்தக் காட்சி

> மானிலம் அதனில் 'உண்டு போர்' எனில் அந்த மாற்றம்
> தேனினும் இனிப்புச் செய்யும் சிந்தையர்..............

என்று கம்பன் போர்வீரர்களின் மறத் தன்மையை வர்ணிக்கும்போது சொல்லுகின்ற வரிகளை இன்றைக்கு நினைப்பூட்டுகின்றது.

சேனை திரண்டுவிட்டது. மெயில் வண்டியை ஸ்டேஷனுக்கு அனுமதிப்பதற்குக் கைகாட்டி இறக்கப் பட்டுவிட்டது. மெயில் வேகத்தில் வந்துகொண்டிருக்கிறது. சிதம்பரம் பிள்ளையும் அவருடைய சேனை வீரர்களும் மெயில் வண்டி நிற்பதற்கு முன்னாலும் அதன் இஞ்சினுக்கு முன் தண்டவாளத்தில் குதித்துவிடுவார்களோ என்று நினைக்கும்படி துடித்துக்கொண்டிருந்தார்கள்......இதற்குள் அந்த படையெடுப்பை விரும்பாதவர்களான சிறுபான்மைத் தொகுதியில் இருந்தவர்களிடையே ஒரு பரபப்பு ஏற்பட்டது. அவர்களிற் சிலர் சிதம்பரம் பிள்ளையிடம் சென்று அந்த முரட்டு முயற்சியை விட்டுவிடும்படி பேசிப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. கடைசியாக எங்களுடன் அதே வண்டியில் வந்துகொண்டிருந்த சேலம் சக்கரவர்த்தி விஜயராகவாச்சாரியாரிடம் சென்றார்கள். விஜயராகவாச்சாரியார் திலகர் கூட்டத்தைச் சேர்ந்தவர். காங்கிரஸின் தீர்மானத்தை மிகக் கடுமையாகக் கண்டிப்பவர்களில் முதன்மையானவர். ஆதியிலிருந்து காங்கிரஸ் மகாசபையின் செல்வாக்குக்குச் சிறந்த துணைவரான பழுத்த தேசபக்தர். சண்டை கிடைத்தால் சாமான்யத்தில் விட்டுவிடக் கூடியவரல்ல. வக்கீல் தொழிலிலும் சரி காங்கிரஸ் மேடையிலும் சரி எதிர்கட்சியை கதிகலங்கச் செய்துவிடக்கூடிய திறமை

வாய்ந்தவர். சிதம்பரம் பிள்ளையிடத்தில் மிகவும் அபிமானமுள்ளவர். பிள்ளையவர்கள் தம்முடைய கப்பலோட்டும் முயற்சியில் அந்த 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'க்கு மூலதனம் தேடிப் பங்குதாரர்களைச் சேர்க்கச் சேலம் வந்திருந்தபோது ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரும், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் தான் அந்த முயற்சிக்கு முன்னால் நின்று உதவிபுரிந்தவர்கள். அந்த இரண்டு ஆச்சாரியார்களுக்குள் ராஜகோபால ஆச்சாரியார் காந்தியின் கட்சியைச் சேர்ந்தவராகிவிட்டதால் அவருடைய வார்த்தை சிதம்பரம் பிள்ளையிடத்தில் செல்லாது. விஜயராகவாச்சாரியார் காந்தி கட்சிக்கு விரோதமானதினாலும் சிதம்பரம் பிள்ளைக்கு விஜயராகவாச்சாரியாரிடத்தில் மிகுந்த பக்தி விசுவாசம் இருந்ததினாலும் அவர் சொன்னால்தான் சிதம்பரம் பிள்ளை கேட்பார் என்று விஜயராகவாச்சாரியாரிடம் போய் சிதம்பரம் பிள்ளை செய்யத் தீர்மானித்திருக்கிற காரியத்தை விட்டுவிடும்படி அவருக்குச் சொல்லச்சொல்லி விஜயராகவாச்சாரியாரை வேண்டினார்கள். பணத்தை மட்டும் கருதிய கச்சேரி வழக்குகளில் கூட தம்முடைய கட்சிக்காரனை விட்டுக் கொடுக்காத விஜயராகவாச்சாரியார் தேசாபிமானத்திலும் காங்கிரஸ் கொள்கையிலும் தம் கட்சியைச் சேர்ந்தவராகத் தமக்கு மிகவும் வேண்டியவரான சிதம்பரம் பிள்ளையை விட்டுக் கொடுத்துவிடுவாரா? சிதம்பரம் பிள்ளை செய்வதில் குற்றம் ஒன்றுமில்லையென்று பேசி பிராது சொல்ல வந்தவர்களை மருட்டிவிட்டார். அவருடன் பேசப் போனவர்களில் அவருக்குச் சரியான பதில் சொல்லி எதிர்வாதம் புரியத் தைரியமும் சாமர்த்தியமும் உள்ளவர்கள் யாரும் இல்லை. அந்த வண்டியில் இருந்த அத்தனை பேர்களுக்குள்ளும் விஜயராகவாச்சாரியாரை மடக்கக்கூடிய

விவாதத் திறமையும் விநயமும் துணிச்சலும் சமயோசித சாதுரியமும் உள்ளவர் ஒரே ஒருவர்தான் உண்டு. அவர்தான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். வக்கீல் தொழிலிலும் விஜயராகவாச்சாரியாருக்கு எதிர்க் கட்சியில் ராஜகோபாலாச்சாரி அமைந்தால்தான் கட்சிக் காரனுக்கும் திருப்தி, கச்சேரியில் காட்சிக்காரர்களுக்கும் திருப்தி. ஒரு வழக்கில் விஜயராகவாச்சாரியார் ஒரு கட்சிக்கு வக்காலத்து வாங்கிவிட்டால் உடனே எதிர் கட்சிக்காரர்கள் ராஜகோபாலாச்சாரியாரிடம்தான் ஓடு வார்கள். 'விஜயராகவாச்சாரியாரும் சேலம் வாசி, ராஜகோபாலாச்சாரியாரும் சேலம் வாசி. விஜய ராகவாச்சாரியாரும் பிரபல வக்கீல், ராஜகோபாலாச் சாரியாரும் பிரபல வக்கீல். இவரும் ஐயங்கார், அவரும் ஐயங்கார். இவருக்கும் சக்ரவர்த்தி என்ற குடும்பப் பெயர் முன்னால் உண்டு, அவருக்கும் அதேமாதிரி. இவரும் கெட்டிக்காரர், அவரும் கெட்டிக்காரர். 'யானைக்கு யானை கை கொடுத்தாற்போல்தான்' என்று ஜனங்கள் எல்லோரும் பேசிக்கொள்வதுண்டு. இப்படி வார்த்தைகளை அடுக்கிக் காட்டுவதில் மட்டும்தான் இவர்களுக்குள் ஒற்றுமையைக் காணலாம். ஆனால் இந்த இரண்டு ஆச்சாரியார்களும் இயல்பிலும், தொழிலின் செயல் முறையிலும் முற்றிலும் வேறுபட்டவர்கள்.

விஜயராகவாச்சாரியார் ராஜஸம் மிகுந்தவர். ராஜ கோபாலாச்சாரியார் ஸாத்விகம் மிகுந்தவர். முன்னவர் ஆர்ப்பாட்டம் உள்ளவர், பின்னவர் அடக்கம் உள்ளவர். மூத்த ஆச்சாரியார் எதிர்கட்சியைத் தம்முடைய வாதங்களால் ஓங்கியடித்து உட்கார வைத்துவிடுவார், இளைய ஆச்சாரியார் நிதானமாகப் பேசித் திணற வைத்துவிடுவார். விஜயராகவாச்சாரியார் உரக்கப் பேசுவதனாலும் உருட்டு மருட்டுகளாலும் ஓங்கி மேஜை

யைத் தட்டி ஓசையெழுப்புவதாலும் நீதிபதியையும், எதிர்கட்சி வக்கீலையும் நிலைகுலைத்து தன் கட்சிக்குப் பலம் காட்டுவார். ராஜகோபாலாச்சாரியார் வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல சந்தடி செய்யாமல் சலசலப்புக் காட்டாமல் மறுக்க முடியாத நியாயங்களைக் காட்டி மயங்கச் செய்துவிடுவார். விஜய ராகவாச்சாரியார் எதிர்கட்சிக்காரர் நடுநடுங்கிப் போகும் படிகூட சிற்சில சமயங்களில் கோபமும் கொதிப்புமாகக் குற்றம் காட்டிப் பேசுவார், ராஜகோபாலாச்சாரியார் கோபிக்கவேண்டிய சமயம் வந்தாலும் கோபக்குறி சிறிதும் காட்டாமல் புன்சிரிப்போடு மோகனாஸ்திரம் விட்டதுபோல முன்னால் நிற்பவனை முழிக்கச் செய்து விடுவார். விஜயராகவாச்சாரியார் கட்சிக்காரன் கொடுக்கவேண்டிய 'பீஸை' பைசா பாக்கியில்லாமல் கண்டித்துக் கரந்துவிடுவார். ராஜகோபாலாச்சாரியார் கண்டித்துக் கேட்கமாட்டார், கட்சிக்காரன் பேசின 'பீசுக்கு' மேல் அவனே அதிகமாகக் கொடுக்க நினைக்கும்படி அன்பு காட்டுவார். கொடுக்க முடியாதவன் என்று கண்டால் பேசினதற்குக் குறைவாகவும் வாங்கிக் கொண்டு விட்டுவிடுவார். விஜயராகவாச்சாரியாரிடத்தில் பணமில்லாமல் கட்சிக்காரன் பக்கத்தில் போகமுடியாது. ராஜகோபாலாச்சாரியாரிடத்தில் பணமில்லாமலும் பயமின்றிப் போகலாம்......இது சுபாவ வித்யாசந்தான். விஜயராகவாச்சாரியார் தொழில் முறையில் கண்டிப்பாக இருந்தாரென்பதன்றி பண ஆசையுள்ளவரென்றாவது, பணத்தை மட்டும் கருதி குணத்தை விட்டவரென்றாவது சொல்லமுடியாது.

இத்தனையும் எதற்காகச் சொன்னேன் என்றால் மிகப் பெரிய காங்கிரஸ் தலைவருள் ஒருவரான விஜய ராகவாச்சாரியாரை கச்சேரியிலாவது வேறிடத்திலாவது

யாராவது வெல்ல முடியுமானால் அது ராஜகோபாலாச்சாரியார் ஒருவர்தான். விஜயராகவாச்சாரியாரிடத்தில் ராஜகோபாலாச்சாரியார் அபிரிமிதமான மரியாதை காட்டுவார். எவருக்கும் வணங்காமுடி மன்னரான விஜயராகவாச்சாரியாருக்கு ராஜகோபாலாச்சாரியாரிடத்தில் மட்டும் கொஞ்சம் வணக்கம் வரும்.

கடைசியாக ராஜகோபாலாச்சாரியார் விஜயராகவாச்சாரியாரிடத்தில் மிகவும் விநயமாகப் பேசியதின் விளைவாக சிதம்பரம் பிள்ளையின் சண்டித்தனத்தை விட்டுவிடும்படி யோசனை சொல்ல விஜயராகவாச்சாரியார் சம்மதித்தார். ராஜகோபாலாச்சாரியார் விஜயராகவாச்சாரியாரிடத்தில் பேசியதின் சாரம் 'மெயில் வண்டி நம்முடைய வண்டிக்கு முன்னால் போகவேண்டுமென்பது நியாயம் அல்லதான். அதற்காக நாம் போர் தொடுப்பதில் அநியாயம் இல்லை. ஆனாலும் நம்முடைய சுயராஜ்யத்துக்காக நாம் போராடவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. நம்முடைய சக்திகளையெல்லாம் சுதந்தரப் போராட்டத்துக்காகச் சேமிப்பதை விட்டு இந்தச் சின்னச்சின்ன விஷயங்களில் சிதறவிடக் கூடாது. அன்றியும் இங்கே நாம் இந்தச் சண்டையில் இறங்கிவிட்டால் அது முடிவுபெற எவ்வளவு காலம் போகுமோ தெரியாது. கல்கத்தாவிற்குச் சென்று நாம் உடனே கவனிக்கவேண்டிய காங்கிரஸ் வேலைகளெல்லாம் கெட்டுப்போகும்' என்பதுதான்.

உடனே விஜயராகவாச்சாரியார் சிதம்பரம் பிள்ளையை அழைத்துவர ஆள் விட்டார். சிதம்பரம் பிள்ளை வந்தார். விஜயராகவாச்சாரியார் சொன்னார். சிதம்பரம் பிள்ளை கேட்டார். மெயில் முன்னாற் போயிற்று. நாங்கள் பின்னால் போனோம். இந்த

சம்பவத்தில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய ஆண்மையையும், வெகு விரைவில் கட்சி சேர்த்துவிடக் கூடிய ஆற்றலையும், எதிர்ப்புகளுக்கு அஞ்சாத துணிச்சலையும், தலைவனுக்கு உடனே தலைவணங்கும் தளபதியின் தன்மையையும் நான் கண்ணாரக் கண்டேன்.

வெள்ளைக்காரரை விரட்ட வேண்டும் என்பதில் வெகு மூர்த்தண்யமான முரட்டுத்தனம் காட்டுவாரென்றாலும் சிதம்பரம் பிள்ளை மிகவும் இளகிய மனமும் இனிய குணமும் உள்ளவர். நண்பர்களிடத்தில் வெகு நயமாகவும் நாகரீகமாகவும் நடந்துகொள்வார். அவருடைய வாதங்களில் அற்பத்தனமோ கண்ணியக் குறைவோ காணமுடியாது. அவருக்கு அஹிம்சை மார்க்கத்தில் அணுவேனும் நம்பிக்கையில்லை. பகைவனை வெல்லுவதில் பரிசுத்தம் பார்க்கமுடியாதென்பதும், போர் மூண்டுவிட்ட பின் புண்ணியம், பாவம், பொறுமை, பொருமை என்றெல்லாம் ஆலோசிக்க அகத்தியம் இல்லையென்பதும் அவருடைய கொள்கை. போர் தொடுக்கும் காரணம் மட்டும் சரியானதா என்று பார்க்கவேண்டும். அது நியாயமானதென்று நிச்சயித்துவிட்டால் போரின் முறைகளைப்பற்றி நிறை பார்த்துக்கொண்டிருப்பது கோழைத்தனம் என்பதே அவர் கொண்டது. ஆனால் இந்த நம்பிக்கை அவருடைய மனப்பூர்வமானது. மனசில் ஹிம்சையையே மனனம் செய்துகொண்டு வெளியில் அஹிம்சையையே பேசி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உலுத்த குணம் அவரிடத்தில் இல்லவே இல்லை. இந்த விஷயத்தில் நம்மிற் பெரும்பாலோரும் பித்தலாட்டக்காரர்கள் தான் என்று சொன்னால் அது பிழையாகாது.

கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்த பின் நாங்கள் இறங்கியிருந்த இடத்தில் சிதம்பரம் பிள்ளை ஓய்வு

ஒழிச்சலில்லாமல் காந்தியடிகளின் அஹிம்சை வழி களுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து 'ஓட்' சேகரிக்க முயன்றார். ஆனால் அவருக்குக் கிடைத்த ஆதரவு மிக மிகவும் சொற்பமே. திலகர் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடங்கொடுக்க மாட்டார் என்று நம்பின சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் காந்தியையே ஆதரித்தார்கள். அப்போது காங்கிரசுக்கு மிகச் சிறந்த தலைவர்களாக விளங்கிய அனைவரும் ஏகோ பித்து எதிர்த்துப் பேசியும்கூட ஏராளமான ஓட்டுகளால் காந்தியவர்களுடைய தீர்மானம் நிறைவேறியது.

மனித சுபாவத்துக்கு மாறானதென்றும், நடை முறைக்கு சாத்தியமானதல்லவென்றும், இன்று நாம் அனுபவத்தில் காண்கிற அந்த அஹிம்சை தீர்மானம் அவ் வளவு அமோகமான ஓட்டுகளால் நிறைவேறின ரகசியம் என்ன என்பதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

என்னவென்றால் மனித சுபாவத்தில் மறைந்து கிடக் கிற ஆன்ம உணர்ச்சி எப்போதும் அஹிம்சையைத்தான் நாடுகின்றது. ஆனால் மனிதனுடைய நித்திய அனுஷ்டா னத்தில் ஒவ்வொரு நிமிஷமும் முன்னணியில் நிற்கிற சரீர உணர்ச்சிகள் அவ்வளவும் ஹிம்சையையே அவலம்பிக் கின்றன. பெரும்பாலும் மக்களுக்குள் மறைந்தும் இருந்துகொண்டிருக்கிற ஆன்ம உணர்ச்சி ஒரு சிறிதும் தலைதூக்க முடியாதபடிதான் மனித சமூகத்தின் சமுதாய வாழ்க்கை நடந்தும் நடத்தப்பட்டும் வருகிறது. எனினும் இந்த ஆன்ம உணர்ச்சி என்பது ஒவ்வொரு மனிதனிடத்தி லும் மறைவாகவேனும் இருந்துகொண்டுதான் இருக்கிற தென்பது உண்மையிலும் உண்மை.

அற்புதப் பிறவியான மகாத்மா காந்தியவர்களின் அருந்தவங்களால் அவருக்குண்டான அதிசயிக்கத்தக்க

ஆன்ம சக்தியின் வேகத்தால் எல்லா மனிதரிடத்திலும் இருந்துகொண்டே யிருக்கிற ஆன்ம உணர்சியானது அந்த கல்கத்தா காங்கிரசில் மேலோங்கி நிமிர்ந்து நின்றது. அதனல், தங்களுடைய தினசரி வாழ்க்கையில் அஹிம்சை கொள்கைகளை அனுஷ்டித்தறியாத, அனுஷ்டிக்கவே முடியாத, முழுதும் முரட்டுப் பேர்வழிகளும் கூட காந்தியடிகளின் அஹிம்சை தீர்மானத்தை ஆவேசத்தோடு ஆதரித்தார்கள். அடிக்கடி அப்படி மேலோங்கி வருகின்ற ஆன்ம உணர்ச்சியின் உச்சாடன வேகம் குறைந்துபோனதனல்தான் இன்றைக்கு அந்த அஹிம்சை மார்க்கத்துக்கு அடிப்படையாக இருந்த காங்கிரஸ்காரர்களிடத்திலும் கலவரங்களைக் காண்கிறேம்.

கலகங்களும் கலவரங்களும் எவ்வளவு ஏற்பட்டாலும் அந்த ஆன்ம உணர்ச்சி அஹிம்சையைத்தான் அவலம்பிக்கும். அந்த ஆன்ம உணர்ச்சி சமுதாய வாழ்க்கையில் அற்றுப் போகாமல் இருக்கச் செய்வதுதான் மகாத்மாக்களின் வேலை. அந்த வேலையினல்தான் மனித சமூகம் மிருக வாழ்க்கைக்கு மாறுபட்டதாக இன்னும் இருந்து வருகிறது.

கல்கத்தாவில் காந்தியடிகளின் அஹிம்சை தீர்மானம் நிறைவேறியதிலிருந்து சிதம்பரம் பிள்ளையவர்களின் அரசியல் வாழ்க்கை அடங்கிவிட்டது. காந்தியை எதிர்க்க முடியாதென்று கண்டு ஒதுங்கிவிட்டார்.

சிதம்பரம் பிள்ளையவர்கள் நல்ல தமிழன். தமிழன் என்றல் தமிழ்ப் பண்புகள் நிறைந்தவர். தமிழ்ப்பண்பு என்றல் தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கங்களிலும் தமிழ் மொழி இலக்கியங்களிலும் தமிழன் எந்தெந்த நோக்கங்களைச் சிறந்ததெனவென்று பின்பற்றி வாழ்ந்து வந்திருக்கிருனே அத்தக் குணவிசேஷங்கள் நிறைந்தவர். தமிழ்

இலக்கிய நூல்களில் ஆழ்ந்த அறிவுடையவர். சுருங்கச் சொன்னால் தமிழனுடைய லட்சியப் பண்புகள், தெய்வ நம்பிக்கை, வீரம், கலை, காதல், என்று சொல்லிவிடலாம். இந்த நான்கு ரஸனைகளும் ஏறத்தாழ சரிசமானமாகக் கலந்துள்ள பண்புதான் தமிழ்ப் பண்பு. இதில் ஒன்று இரண்டு சற்றே அதிகமாகவோ குறைவாகவோ அவரவர்களுடைய இயல்புக்கு ஏற்றவாறு இருக்கலாம். ஆனால் இந்த நான்கில் ஒன்று இல்லாவிட்டாலும் அது சரியான தமிழ்ப்பண்பு ஆகாது. ‘சங்ககால இலக்கியங்கள்’ என்ற பெயரில் நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் ஆதியாக ‘பாரதியார் பாட்டுகள்’ அந்தமாக எல்லா தமிழ் இலக்கியங்களையும் ஒன்றாகச் சேர்த்து ஊடுருவிப் பார்ப்போமானால் தமிழ் நோக்கம், தமிழ்-வாழ்க்கை, தமிழ்க் கலை, தமிழ்ப்பண்பு என்பன என்ன என்று எளிதில் விளங்கும். அந்தத் தமிழ்ப்பண்பை தமிழ்மொழி நூல்களில் மட்டுமன்றி தமிழ்நாட்டில் எங்கெங்கும் இன்றளவும் நின்றுளவாகிய பழைய கோயில்களிலும் கோபுரங்களிலும் குளங்களிலும் கூவங்களிலும் கோட்டைகளிலும் கொத்தளங்களிலும் இருக்கின்ற சிற்பச் சிலைகளிலும் சித்திரங்களிலும் கல்வெட்டுச் சாசனங்களிலும் அந்தத் தமிழ்ப் பண்பைக் காணலாம். அந்தத் தமிழ்ப் பண்பிற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற வாதுகளும், சாதி சமயச் சண்டைகளும், தமிழன் - அன்னியன் என்ற தர்க்கங்களும் இல்லை. அப்படிப்பட்ட தமிழ்ப் பண்புக்கு அறிகுறியாகச் சிதம்பரம் பிள்ளை திகழ்ந்தார்.

சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அந்திய நாட்கள் வறுமையால் வாடிப்போனதாக நேர்ந்தது தமிழ் நாட்டின் தப்பிதமேயாகும். அடிமைத்தனமிருந்து விலங்கினங்கள் வசிக்கும் காடாந்தகாரமாக இருந்த தமிழ் நாட்டில்

கல்லையும் முள்ளையும் களைந்து படாத துன்பங்களைப் பட்டுப் பண்படுத்தி தேசாபிமானம் என்ற விதையை நட்டுப் பயிர்செய்து பாதுகாத்த ஆதி வேளாளனுகிய சிதம்பரம் பிள்ளை துன்பம் நிறைந்த சிறைவாசத்தையும் கழித்து வெளியே வந்தபோது தமிழ்நாடு அவரைத் தக்கபடி வரவேற்று ஆதரிக்கத் தவறிவிட்டது. இன்றைக்கு அவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று துடிக்கின்ருேம். அந்தமட்டில் அது ஒரு நன்முயற்சிதான் என்ருலும் சிதம்பரம் பிள்ளையை அறிந்த யாரும் அவருடைய கடைசி நாட்கள் கஷ்டங்கள் நிறைந்தனவாக இருந்ததைத் தமிழர்கள் கவனிக்காமல் விட்டு விட்டார்களே என்று கண்ணீர்விட்டுக் கலங்காமல் இருக்க முடியாது.

சுப்ரமண்ய பாரதியார் சோறின்றி வாடிக்கொண்டே பாடிக்கொண்டு மறைந்தார். சுப்ரமண்ய சிவா ஊரூராகச் சென்று பிச்சைக்காரனைப்போல் பிழைத்து மாண்டார். தமிழ்நாட்டுத் தியாகிகளுள் தலைவரான சிதம்பரம் பிள்ளை வறுமையில் வாடியும் ஓசையில்லாமல் தமது கடைசி நாட்களைக் கஷ்டங்களிலேயே கழித்து ஒழித்தார்.

சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அருமை பெருமைகளைப்பற்றி அலுப்பில்லாமல் அடிக்கடி பேசி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்த நானறிந்த முதல் மனிதன் காலஞ்சென்ற சுப்ரமண்ய சிவா அவர்கள். சிவா அவர்கள் சிதம்பரம் பிள்ளையின் அந்தரங்கங்களையெல்லாம் நன்ருக அறிந்தவர். சிதம்பரம பிள்ளையவர்களுடைய உண்மையான வரலாறுகளைத்தெரிந்திருந்தவர் சிவாதான். பிள்ளையவர்களுடைய சரித்திரத்தை தாமே எழுதப்போவதாக சிவா அவர்கள் சேலத்தில் என்னிடம் சொன்னுர். அதற்குச் சில பாட்டுகயுளைம் அதை அச்சேற்ற வேண்டிய அனுகூலங்களையும் நான் செய்யவேண்டும்

என்று சிவா என்னை கோரியிருந்தார். அது கைகூடுமுன் அவர் காலமாகிவிட்டார். சிவாவின் சிம்ம கர்ஜ்ஜனை போன்ற பிரசங்கங்களில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய தேச பக்தியைப் பற்றியும் தியாகங்களைப் பற்றியும் அவர் உள்ளம உருகி கண்ணீர் ததும்பப் பேசிய கட்டுரைகள் இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. சிவாவின் மூச்சுப் போகிறவரையில் சிதம்பரம் பிள்ளையின் சிறப்புகளைப் பாடிக்கொண்டே பல ஊர்களிலும் அலைந்து திரிந்து கடைசியாக சேலம் ஜில்லாவிலுள்ள பாப்பாரப் பட்டியில் பாரதமாதாவின் கோவில்கட்ட சிவா அவர்கள் செய்த முயற்சிகளில் அந்த ஆலயத்தில் பல தேச பக்தர்களின் சிலைகளைப் பிரதிஷ்டை செய்ய நினைத்திருந்ததையும் அந்த தேச பக்தர்களுக்குள் சிதம்பரம் பிள்ளை முதல் ஸ்தானம் பெற்றிருந்தார் என்பதையும் நான் அறிவேன். பாப்பாரப் பட்டிக்கு நான் ஒருமுறை போயிருந்தபோது அங்கே சுப்ரமண்ய சிவா பாரதமாதா கோவிலைக் கட்டக் குறிப்பிட்டிருந்த இடத்தையும் அந்த கோயிலைக்கட்டி முடிக்கவேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு அதற்காக வாக்களித்திருந்த அன்பர்களையும் கண்டேன். பாரதமாதா கோயிலுக்காக சிவா வகுத்திருந்த திட்டங்களையும் அதில் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு எவ்வளவு சிறந்த பீடம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதையும் அறிந்தேன். அந்த முயற்சி அவரோடு முடிந்தது.

சிவாவுக்கு அடுத்தபடி சிதம்பரம் பிள்ளைக்குத் தமிழ் நாட்டில் தனிச் சிறப்புகள் நடக்கவேண்டுமென்று துடி துடித்து அலைகிறவர் சிவஞான கிராமணியார் என்பதுதான் எனக்குத் தெரியும். சென்ற பத்து ஆண்டுகளாக சிவஞான கிராமணியார் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு சிறப்பான ஒரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த

வேண்டுமென்று தமிழ் நாட்டின் பலவிடங்களிலும் அவருடைய அபூர்வமான சொல்மாரியைச் சொரிந்து வந்திருக்கிறார். சிதம்பரம் பிள்ளையின் உருவப்படத்தை முதன் முதல் சென்னையில் காங்கிரஸ் மண்டபத்தில் திறந்துவைத்து விழா நடத்திய ஏற்பாடுகளையெல்லாம் செய்தவர் சிவஞான கிராமணியார்தான். அந்த உருவப் படத்தை மாட்ட அந்த காங்கிரஸ் மண்டபத்தின் சுவர்களில் ஒரு ஒதுக்கான இடத்தை யாரோ காட்டி விட்டதற்காக கிராமணியார் கடுங் கோபமடைந்து அந்தப் படம் மண்டபத்தின் மையத்தில் வைக்கப்பட வேண்டுமென்று வாதாடி அப்படியே வைக்கப்பட்டதையும் நான் அறிவேன்.

'கப்பலோட்டிய தமிழன்' என்ற சிறப்புப் பெயருடன் சிதமபரம் பிள்ளையைப் பற்றி வெளியிடப்பட்ட இந்தச் சிறு நூலும் சிதம்பரம் பிள்ளையவர்கள் மீதுள்ள ஆர்வத்தின் அறிகுறியே ஆகும். சிதம்பரம் பிள்ளையவர்களுடைய சரித்திரத்தை விஸ்தாரமாகத் தெரிந்தவர்கள் யாரும் அதை எழுதவில்லையே என்ற ஆத்திரத்தால் தெரிந்தமட்டிலும் துண்டுதுண்டான நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்து மக்களிடையே பிள்ளையவர்களுடைய நினைவு மங்காமல் இருக்கவேண்டுமென்று செய்துள்ள இந்த முயற்சியைத் தமிழ் நாடு மிகவும் நன்றியுடன் வரவேற்கும் என்பது என் நம்பிக்கை.

# சிதம்பரம் பிள்ளை நினைவு

★ ★ ★

மடமையதோ பிறநாட்டார் மயக்கந் தானோ
மக்களெல்லாம் சுதந்தரத்தை மறந்தாராகி
அடிமை இருள் நள்ளிரவாய் அனைத்தும் மூடி
யாரும்தலை நீட்டவொண்ணா அந்தநாளில்
திடமனத்துச் சிதம்பரப்பேர் பிள்ளையாவார்
செய்திருக்கும் அச்சமற்ற சேவை சொன்னால்
உடல் சிலிர்க்கும் உயிர்நிமிர்ந்து உணர்ச்சிபொங்கும்
உள்ளமெல்லாம் நெக்கு நெக்காய் உருகுமன்றோ.

எல்லாரும் தேசபக்தர் இந்தநாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும்விளக்க வொண்ணாத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்தநாளில்
வல்லாளர் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெல்லாம் விரித்துரைத்தால் வாய்விட்டேங்கி
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டி
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்.

சாதிகுலச் சமயமெல்லாம் கடந்த தக்கோர்
சமரசமும் சன்மார்க்கம் தழுவும் சான்றோர்
நீதிநெறி மிகப்பயின்ற பலபேர் சேர்ந்து
நிருவியநம் காங்கிரசை நிதமும் போற்றி
பேதமுற்றுப் பிணங்கிவிட நேர்ந்த போதும்
பெரியசபை அதை இகழ்ந்து பேசாநேசன்
ஓதி அதன் வளர்ச்சியையே விரும்பி வாழ்த்தி
உள்ளளவும் சிதம்பரந்தான் உவப்பான் உள்ளம்.

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாம் என்று
பெரியபலத் தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினல் தலைவ ராகி
காங்கிரசை நடத்தியதைக் கண்டு நொந்து
தேசநலம் த்யா கமின்றி வருமோ என்று
திலகர்பிரான் செய்தபெரும் கிளர்ச்சி சேர்ந்து
ஓசைபடா துழைத்தசில பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனர் ஒருவராகும்.

உழுதுபல தொழில் செய்து உழைப்போ ரெல்லாம்'
உணவும்உடை வீடின்றி உருகி வாட
பழுதுமிக அன்னியர்க்குத் தரக ராகிப்
பசப்புகின்ற வீணருக்கோ சுகங்கள்! என்று
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம் கண்டு
அந்நாளில் சிதம்பரனர் நட்ட வித்தாம்
விழுதுபல விட்டுபெரும் மரமாய் இன்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக் காண்போம்.

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக்கேட்கும்
கறுப்பெனினும் சிரிப்புமுகம் கருணை காட்டும்
குள்ளமென்னும் ஓர் உருவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க நிற்கும்
வெள்ளையன்றி வேறு நிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்
கொள்ளை கொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்.

○○○

# வ. உ. சிதம்பரம் பிள்ளை

★ ★ ★

சிதம்பரம் பிள்ளையென்று பெயர் சொன்னால்—அங்கே
சுதந்தர தீரம் நிற்கும் கண்முன்னால்
விதம்பல கோடி துன்பம் அடைந்திடினும்—நாட்டின்
விடுதலைக் கேயுழைக்கத் திடந்தருமே. (சிதம்)

அடிமை விலங்கையெல்லாம் அறுத்தெரியும்—நல்ல
ஆற்றல் கொடுக்கும் அவன் சரித்திரமே
கொடுமை பலசகிக்கும் குணம்வருமே—நாம்
கோரும் சுதந்தரத்தை மணந்திடுவோம் (சிதம்)

திலக மகரிஷியின் கதைபாடும்—போது
சிதம்பரம் பிள்ளைவந்து சுதிபோடும்
வலது புயமெனவே அவர்க்குதவி—மிக்க
வாழ்ந்துக் குரிமைபெற்றான் பெரும்பதவி. (சிதம்)

திருக்குறள் படித்திட ஆசைவரின்—புதுச்
சிதம்பரம் பிள்ளைஉரை பேசவரும்
தருக்கிடத் தக்கபெரும் தமிழ்ப்புலமை—கற்றோர்
தலைவணங்கிப் புகழும் தனிநிலைமை. (சிதம்)

சுதேசிக் கப்பல்விட்ட துணிகரத்தான்—அதில்
துன்பம் பலசகித்த அணிமனத்தான்
விதேச மோகமெல்லாம் விட்டவனும்—இங்கே
வீரசு தந்தரத்தை நட்டவனும்.

நாட்டின் சுதந்தரமே குறியாக—அதை
நாடி உழைப்பதுவே வெறியாக
வாட்டும் அடக்குமுறை வருந்துயரை—வெல்ல
வாழும் சிதம்பரத்தின் பெரும் பெயராம் (சிதம்)

3302

# நாமக்கல் கவிஞரின்
## நூல்கள்

**கவிதை**

தமிழன் இதயம்
சங்கொலி
பிரார்த்தனை
பறித்த பூக்கள்

3302

**காவியம்**

அவளும் அவனும்

**நாவல்**

மலைக் கள்ளன்

**இலக்கியம்**

என் கதை
இலக்கிய இன்பம்

**நாடகம்**

அரவணை சுந்தரம்

**கட்டுரைகள்**

பார்ப்பனச் சூழ்ச்சியா ?
ஆரியராவது திராவிடராவது
கப்பலோட்டிய தமிழன்

★

**தமிழ்ப் பண்ணை**
தியாகராயநகர் - சென்னை.